## ஆய்வுப்பொருள்: இரண்டு:-
## இறையருளை வழங்கும் அருளடையாளங்கள்

15

### 2.7. துறவற அர்ப்பண வாழ்வு

**குருக்கள்**

**மறைமாவட்டக் குருக்கள்**

ஆயர் ஒருவரின் தலைமையின் கீழ் பொதுநிலையினர் மத்தியில் வாழ்ந்து அவர்களுக்குப் பணிபுரிந்து, அவர் களோடு இணைந்து இறையரசைக் கட்டியெழுப்பத் தம்மை அர்ப்பணிக்கும் குருக்களாவர்.

**துறவற சபைக் குருக்கள்**

தெரிவு செய்யப்பட்ட சபை முதல்வரது தலைமையின் கீழ், தமது நெறிக் கோவைக்கு ஏற்ப, துறவற வார்த்தைப் பாடுகள் வழியாக இவ்வுலகில் விண்ணக முன்சுவையை அனுபவித்து அறிக்கையிடத் தம்மை அர்ப்பணிப்பவர்களாவர்.

- துறவற சபையைச் சேர்ந்த சகோதரர்கள் ஏன் திருப்பலி ஒப்புக்கொடுப்பது இல்லை?

இவ்வருட்சகோதரர்கள் தத்தம் சபையில் இணைந்து எளிமை, தூய்மை, பணிவு ஆகிய நற்செய்தி அறிவுரைகளின்படி வாழுகின்ற துறவிகள். இவர்கள் கிறிஸ்துவின் பணிக் குருத்துவத்தில் பங்கேற்காமல் வாழ்நாளெல்லாம் துறவிகளாகப் பணிபுரிய அழைப்புப் பெற்றவர்கள். எனவே, அவர்கள் பணிக் குருத்துவத்திற்கே உரித்தான அருளடையாளங்களை நிறைவேற்றுவதில்லை. அருட்சகோதரிகளும் அவ்வாறே இறைபணிக்குத் தம்மை அர்ப்பணிக்கின்றனர்.

கிறிஸ்துவின் வாழ்வுக்குச் சான்றுபகர்ந்து கிறிஸ்தவ உத்தமதனத்தை உறுதிப்படுத்தி, உண்மைக் கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்று பகர இறைவன் திருச்சபையில் துறவிகளைத் தோன்றச் செய்தார். துறவற வாழ்வு என்பது நற்செய்தி அறிவுரைகளான எளிமை, தூய்மை, பணிவு என்ற மூன்று வார்த்தைப்பாடுகளையும் ஏற்று, இறை அரசின் விழுமியங்களை வலியுறுத்தி, செபத்திலும் தியானத்திலும் பிறர்நலச் சமூகப் பணியிலும் ஈடுபட்டு தனியாகவும் குழுவாகவும் வாழ்வதாகும்.



இலவச விநியோகத்திற்காக

## துறவற வாழ்வின் ஆரம்பம்

ஆரம்பத்தில் ஆண், பெண் இருபாலாரும் கிறிஸ்துவைப் பின்பற்றித் தூய்மையில் நிறைவாக வாழப் போவதாகவும், வாக்களித்து தத்தம் குடும்பங்களிலே இருந்து திருமண வாழ்வைத் துறந்து பல ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபட்டு, பணி வாழ்வை மேற்கொண்டனர். இவ்வாறு வாழ்ந்தவர்கள் ''தபோதனர்'' என்று அழைக்கப்பட்டனர். இம்முறை 1ம், 2ம் நூற்றாண்டுகளில் கடைப்பிடிக்கப்பட்டது. 3ம் நூற்றாண்டில் துறவிகள் தம் வாக்குறுதியில் தவறும்பொழுது தண்டிக்கப்பட்டனர். இக்காலத்தில் ஏற்பட்ட கலாபனைகளினால் குடும்பங்களில் இருந்து வாழ முடியாது என்று அறிந்து பாலைவனத்தில் சில குடில்கள், குடிசைகள் அமைத்து வாழ்ந்தனர். இவர்கள் ஏகாந்திகள் அல்லது வனத்துப் பிதாக்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களுள் தேப்ஸ் சின்னப்பர், எகிப்திய அந்தோனியார் போன்றோர் முக்கியமானவர்கள் ஆவர்.

இன்று நாம் காண்பது போன்ற துறவற குழுவாழ்வின் நிறுவுனர் புனித பக்கோமியுஸ் ஆவார். இவ்வாறு துறவற வாழ்வின் வரலாற்றில் புனித தேப்ஸ் சின்னப்பர் (ஏகாந்த வாழ்வு), வனத்து அந்தோனியார் (ஏகாந்த வாழ்வு), புனித பக்கோமியுஸ் (துறவற குழு வாழ்வு) போன்றவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். துறவற வாழ்வுக்குரிய ஒழுங்குகளை எழுதிக் கொடுத்தவர் புனித ஆசீர்வாதப்பர் ஆவார்.


இறுதியாக துறவற மடங்களிலும் பள்ளிகளிலும்
மருந்தகங்களிலும் நற்செய்தி அறிவிப்புத் தளங்களிலும்
பணியாற்றுகின்ற ஆண்கள், பெண்கள்,
சகோதரர் சகோதரிகள்
தாழ்ச்சியோடும் உறுதியான பிரமாணிக்கத்தோடும்
துறவற அர்ப்பணிப்பின் வழியாகக்
கிறிஸ்துவின் மணமகளை அணி செய்கின்றனர்.
மக்களனைவருக்கும் பெருந்தன்மையோடு
பல்வேறு பணிகளைப் புரிகின்றனர்.
இவர்களைத் திருச்சங்கம்
ஊக்குவிக்கிறது. பாராட்டுகிறது.

2ம் வத்திக்கான் சங்க ஏடு
திருச்சபை # 46.



இலவச விநியோகத்திற்காக

துறவற வாழ்வென்பது ஒரு கிறிஸ்தவன் திருமுழுக்கின் வழியாகத் தான் கொடுத்த வாக்குறுதிகளை அதிக பொறுப்புடனும் முழுமையாகவும் நிறைவேற்றுவதாகும். துறவு நிலை என்பது இறை அழைப்பாக உள்ளதுபோல அது ஒரு விசேட கொடையுமாகும். அவன் அவள் வார்த்தைகளால் மட்டுமல்ல, செயலினாலும் நற்செய்தியை வெளிப்படுத்த வேண்டும்.




இவ்வாறான வாழ்க்கை முறைகளுள் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி (திருமுழுக்கு வழியாக) சமமாக அருட்கொடைகளைப் பெறுகின்றனர். இவ் வாழ்க்கை முறைகளில் எவ்விதமான பிரிவினைகளும் இல்லை. வார்த்தைப்பாடுகள் வழியாக புதிய சமூகத்துக்குள் துறவிகள் சேர்க்கப்படுகின்றனர். குழுவாழ்வின் மூலம் தமது அர்ப்பணத்தை உறுதிசெய்து கொள்கின்றனர். குழுவினுள் தமது இன்ப துன்பங்களையும் விருப்பங்களையும் பகிர்ந்து, ஒருவர் மற்றவரை அயலவராக ஏற்று அனைவரும் சமாதானமாக வாழ்வர். துறவற வாழ்வில் இவை பொதுவானவை.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கேற்ப முதலிடத்தைப் பெற வேண்டியவை:

1. திருச்சபைக்காக
2. தாம் இணைந்துள்ள சபைக்காக
3. மக்களுக்காக

- திருச்சபை - திருச்சபையின் வாழ்வில் தகுந்த முறையில் பங்குகொள்ளல்.
- துறவற சபை- துறவற சபை நிறுவுனரின் ஆன்மீகத்தையும் அத்துறவற சபைக்கு உரிய விசேட தனி வரத்தையும் பணியையும் கவனத்தில் கொள்ளல்.
- மக்கள் - தாம் மட்டும் தூய்மையடையாது உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதன் மூலம் பிறரையும் தூய்மையடையச் செய்து பாதுகாத்தல்.

**தாம் வாழும் காலத்தின் தேவைக்கேற்ப இசைவாக்கம் பெறவும், தம் வாழ்வில் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தும் வாழ்வர்.**

**துறவற சபைகள் அனைத்துக்கும் பொதுவான பண்புகள் நான்கு:**

எளிமை

பணிவு

பணியார்வம்


தூய்மை

**துறவியர் இப்பண்புகள் வழியாக கிறிஸ்துவைப் போல தம்மை வெறுமையாக்கி, சிலுவை மரணமட்டும் தம்மைத் தாழ்த்தி, தம் வாழ்வில் கிறிஸ்துவின் அனுபவத்தைப் பெறுகின்றனர்.**



இலவச விநியோகத்திற்காக

துறவற வாழ்வு என்பது ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிவு என்ற மூன்று வார்த்தைப்பாடுகளை வழங்குவதாகும்.




- துறவற வாழ்வில் காணப்பட வேண்டியவை:
  - உடைகள் எளிமையாகவும், துறவறத்தினருக்குப் பொருத்தமாகவும் இருத்தல்.
  - காலத்துக்குப் பொருத்தமான கல்விப் பயிற்சி பெற்றிருத்தல்.
  - தாம் வாழும் சமூகப் பின்னணிக்கேற்ப தமது துறவற சபையின் தூதுப் பணியினை ஒழுங்குபடுத்தல்.

இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்தில் பணிக்காக வருகைதந்த முதலாவது மறைத்தூதுக் குழுக்கள் :

1. பிரான்சிஸ்கன் சபைத் துறவிகள்
2. இயேசு சபைத் துறவிகள்
3. டொமினிக்கன் சபைத் துறவிகள்
4. அகுஸ்தீனார் சபைத் துறவிகள்


இலவச விநியோகத்திற்காக

இத்துறவற சபைகளைத் தவிர ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவ கலாபனைகளின்போது இலங்கையில் கிறிஸ்தவத்தைக் காப்பாற்றுவதற்காக ஒறத்தோறியன் குருக்கள் செயலாற்றினர். முத்திப்பேறுபெற்ற யோசப்வாஸ் அடிகள் ஒறத்தோறியன் சபையின் தந்தையாக மட்டுமல்லாமல் அவர் ஆற்றிய பணியும் இன்றுவரை இலங்கை முழுவதும் கிறிஸ்தவ மறையைப் பாதுகாக்க உதவியாக இருந்தது.

இலங்கைக்கு இத்துறவற சபைகளைச் சேர்ந்த மறைத்தூதுவர்களின் வருகையினால் ஆன்மீக, பொருளாதார, சமூக, கலாசார மாற்றங்கள் அதிகளவில் ஏற்பட்டன.

- பாடசாலைகள் அமைத்துக் கல்விப்பணி புரிந்தனர்.
- வைத்தியசாலைகள் - மருத்துவப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை.
- பிறர்நலப் பணி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
- மக்களின் சமத்துவம் பேணப்பட்டமை.

இவ்வாறான பல மாற்றங்கள் ஏற்பட்டன.

## இன்று இலங்கையில் பணியாற்றும் துறவற / அர்ப்பண வாழ்வு சபைகள்.

### துறவறக் குருக்கள் சபைகள் சில:

◊ **ஆசீர்வாதப்பர் சபை (OSB)**

**பணி :** செபம், சகோதரத்துவம், கல்விப்பணி, மேய்ப்புப்பணி வழியாக இறைவனை மகிமைப்படுத்துதல்.

◊ **நற்கருணை நாதர் சபை (SSS)**

**பணி :** பொதுநிலையினருடன் இணைந்து நற்கருணையை அறிக்கையிட்டு கொண்டாடி வாழ்தல். பங்குப்பணி, செப வாழ்வு, திருப்பலி வாழ்வு வழியாக இறைவனைப் புகழும் இறைமக்களை உருவாக்குதல்.

◊ **பிரான்சிஸ்கன் கப்புச்சின் சபை (OFM - Cap)**

**பணி :** எளிமை வாழ்வின் வழி நீதி, அமைதி, மகிழ்ச்சியை வளர்த்தல்.

◊ **கிளரேசியன் சபை (CMF)**

**பணி :** மறைபரப்புப்பணி, கல்விப்பணி, கத்தோலிக்க வெளியீடுகள்.

◊ **அமலமரித் தியாகிகள் சபை (OMI)**

**பணி :** ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பு, தியானங்கள் வழங்குதல், பங்குப் பணி, ஆன்மீக ஆலோசனைப் பணி, கல்விப்பணி,


இலவச விநியோகத்திற்காக

◈ **பிரான்சிஸ்கன் சபை (OFM)**

**பணி :** கல்விப்பணி, பங்குப்பணி.

◈ **இயேசு சபை (SJ)**

**பணி :** கல்விப்பணி, பங்குப்பணி, சமூக உளநலப்பணி, தியானங்கள் வழங்குதல், இளையோர் பயிற்சி.

◈ **இரட்சகர் சபை (CSsR)**

**பணி :** மறைபோதகப்பணி, பங்குப் பணி, சமூகப்பணி, தியானங்கள் வழங்குதல்.

◈ **செபமாலைத் தாசர் சபை (CR)**

**பணி :** செபம், பரிகாரம், நற்கருணை மைய வாழ்வு, மட வாழ்வு.

◈ **சலேசியன் சபை (SDB)**

**பணி :** இளைஞர் நலப்பணி.

◈ **சொமஸ்கன் சபை**

**பணி :** கைவிடப்பட்டவர்கள், அனாதைகள் பராமரிப்பு.

◈ **பிரான்சிஸ்கன் மூன்றாம் நிலைச் சபை (TOR)**

**பணி :** கல்வி, அனாதைகள் பராமரிப்பு, மேய்ப்புப்பணி, பங்குப்பணி.

◈ **டொமினிக்கன் சபை (OP)**

**பணி :** கல்விப்பணி, பங்குப்பணி, சமூகப்பணி.

### உலகுசார் அர்ப்பண வாழ்வு சபை:

◈ **திருவுளச் சபை (IVD)**

**பணி :** பொதுநிலை ஆன்மீக ஊக்குவிப்பு, மறைபரப்பு, பங்குப்பணி, உலகுசார் அர்ப்பண வாழ்வு.

### துறவற சகோதரர்கள் சபைகள் சில:

◈ **அன்புச் சகோதரர்கள் சபை (FC)**

**பணி :** கல்வி, சமூகப்பணி.

◈ **பிரான்சிஸ்கன் மறைத்தூதுச் சகோதரர்கள் சபை (CMSF)**

**பணி :** தொடக்கநிலை மறைதூதுப்பணி, அனாதை இல்லங்கள்.



இலவச விநியோகத்திற்காக

◈ **மாறிஸ்ட் சகோதரர்கள் சபை (FMS)**

**பணி :** கிறிஸ்துவை அறிவிக்கவும் அன்பு செய்யவும் கல்விப்பணி, இளையோருக்கான சுயதொழிற் கல்வி.

◈ **டி லா சால் சகோதரர்கள் சபை (FSC)**

**பணி :** கல்விப்பணி, இளைஞர் உருவாக்கம்.

## துறவற சகோதரிகள் சபைகள் சில:

◈ **அப்போஸ்தலிக்க கார்மேல் சபை (AC)**

**பணி :** கல்விப்பணி, சமூகப்பணி, முதியோர் பராமரிப்பு.

◈ **அன்னையின் அருளும் இரக்கமும் கொண்ட புனித ஆசீர்வாதப்பர் கன்னியர் சபை (OSB)**

**பணி :** முதியோர் இல்லம்.

◈ **அருள்நிறை கன்னிமரி சபை (BV)**

**பணி :** இளைஞர் பணி.

◈ **இயேசு மரியின் அன்பின் சகோதரிகள் சபை (FCJM)**

**பணி :** கல்வி, நோயாளர், முதியோர் பராமரிப்பு.

◈ **சிலுவையின் கன்னியர் சபை (SCC)**

**பணி :** மறைப்பணி, கல்வி, நோயாளர் பராமரித்தல்.

◈ **திரு இருதய அன்னையின் கன்னியர் சபை (N♡S)**

**பணி :** ஏழைகள் மேம்பாடு.

◈ **டொமினிக்கன் கன்னியர் சபை (மால்டா) (OP)**

**பணி :** மறைப்பணி, சமூகப்பணி.

◈ **புனித சியன்னா கத்தரின் டொமினிக்கன் கன்னியர் சபை (OP)**

**பணி :** இளைஞர், நோயாளர் பணி, கல்விப்பணி, பங்குப்பணி.

◈ **பிரான்சிஸ்குவின் மரியாளின் மறைபரப்புச் சபை (FMM)**

**பணி :** மறைத்தூதுப்பணி, சமூகப்பணி.



இலவச விநியோகத்திற்காக

◈ **நல்லாயன் கன்னியர் சபை (RGS)**

**பணி :** கல்விப்பணி, இளம் பெண்கள் வளர்ச்சியும் பராமரிப்பும், அனாதைகள் முதியோர் இல்லங்கள், பங்குப்பணி.

◈ **தூய தூதர்கள் கன்னியர் சபை (HA)**

**பணி :** மறைக்கல்வி, கல்வி, அனாதை இல்லம், பங்குப்பணி.

◈ **திருச்சிலுவைக் கன்னியர் சபை (HC)**

**பணி :** மருத்துவப்பணி, கல்வி, சமூகப்பணி, பங்குப்பணி.

◈ **திருக்குடும்பக் கன்னியர் சபை (HF)**

**பணி :** கல்வி, சமூகப்பணி, சிறுவர், இளையோர், குடும்பப் பணி, திருத்தூதுப் பணி, பங்குப்பணி.

◈ **ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபை (LSP)**

**பணி :** முதியோர், ஏழைகள் பராமரிப்பு.

◈ **அன்னை திரேசாவின் அன்புக் கன்னியர் சபை (MC)**

**பணி :** ஏழைகள், கைவிடப்பட்டோர், அனாதைகள் பராமரிப்பு.

◈ **சதா சகாய அன்னை சகோதரிகள் சபை (PH)**

**பணி :** கேள்விப் புலனற்றோர் பணி, கல்விப்பணி, சமூகப்பணி, இளையோர் வழிநடத்தல்.

◈ **இறை பராமரிப்புச் சகோதரிகள் சபை**

**பணி :** நோயாளர் பராமரிப்பு, மறைப்பணி, பங்குப்பணி.

◈ **இரட்சகர் சபை (PH)**

**பணி :** மறைப்பணி, சமூகப்பணி, மருத்துவப்பணி, பங்குப்பணி.

◈ **அமல மரியாயின் சபை (SMI)**

**பணி :** கல்வி, மறைக்கல்வி.

◈ **ஆசீர்வாதப்பர் தியான கன்னியர் சபை (OSB)**

**பணி :** ஆழ்நிலைத் தியான வாழ்வு.

◈ **கார்மேல் தியான கன்னியர் சபை (OCD)**

**பணி :** ஆழ்நிலைத் தியான வாழ்வு.



இலவச விநியோகத்திற்காக

◈ **ஏழைகளின் கிளாரம்மாள் தியான கன்னியர் சபை**

***பணி :*** ஆழ்நிலைத் தியான வாழ்வு.

◈ **செபமாலைக் கன்னியர் சபை (CR)**

***பணி :*** ஆழ்நிலைத் தியான வாழ்வு, பரிகார வாழ்வு.

**பின்வருவனவற்றுக்கு விடை எழுதுக.**

1. உமது பங்கில் பணியாற்றும் துறவற சபைகளின் பெயர்கள் மூன்றினைத் தந்து, அவற்றின் விபரங்களை அட்டவணைப்படுத்துக.
2. துறவற, குருத்துவ சபைகளுக்குரிய பணிகளை வெவ்வேறாக எழுதுக?
3. ''இவ்வுலகில் துறவற வாழ்வு பேறுடையது'' என்ற தலைப்பின் கீழ் 250 சொற்களில் ஆக்கம் ஒன்றைத் தயாரிக்கவும்.

சீடத்துவ அர்ப்பணத்தில் இயேசுவைப் பின்பற்றநீர் ஆயத்தமா ?





இலவச விநியோகத்திற்காக